Volume - 1, Edition: 6 (JUNE 2023)
Private Circulation Only

# TNRBA

News Letter - செய்தி மடல்



## Alavayal Sri Devuthi Matha Puja 2023

Special Issue

**TAMILNADU RAJPUT BONDIL ASSOCIATION**

(Reg. No 10/2019)

# Alavayal Sri Devuthi Matha Puja 2023
## Special Issue

## TNRBA
NEWS LETTER

JUNE 2023

உள்ளடக்கம் (Content)


| | |
|---|---|
| வாழ்த்துரை | 3 |
| தலையங்கம் | 4 - 5 |
| ஸ்ரீதேவுத்தி மாத்தா வரலாறு | 6 - 8 |
| ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா திருவிழா அழைப்பிதழ் | 9 |
| ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாட்டு முறைகள் | 10 - 17 |
| ஸ்ரீதேவுத்தி மாத்தா கவிதை | 18 |
| கட்டிட நிதி வேண்டுகோள் | 19 - 20 |
| TNRBA புதுக்கோட்டை கிளை சங்க 40 ஆம் ஆண்டு விழா | 21 - 23 |
| ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை போட்டோ காலரி | 24 - 32 |
| ஆலவயல் ஊராட்சி பற்றிய தகவல்கள் | 33 |
| அறக்கட்டளை நிர்வாகிகள் விபரம் மற்றும் நன்றியுரை | 34 – 35 |




தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கம்
(பதிவு எண். 10 /2019)

மின் இதழ் பதிப்பு - 6
ஜூன் 2023



ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023 சிறப்பிதழ்

RAJPUT
AALAVAYAL DEVUTHI MATHA MANDHIR TRUST

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023 சிறப்பிதழ்

## வாழ்த்துரை

அனைவருக்கும் வணக்கம்.

TNRBA செய்தி மடல் மின் இதழின் ஆறாம் பதிப்பை,
“ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023” சிறப்பிதழாக 25.06.2023 அன்று வெளியிடுவதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த சிறப்பிதழ், புதுக்கோட்டை இராஜபுத்திர வம்சாவழியினர் வழிபடும், ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தாவின் வரலாற்றை பற்றியும், ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா அறக்கட்டளை சார்பாக வெகு விமர்சையாக கொண்டாடபடும் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாடு முறைகளை பற்றியும், அனைத்து இராஜபுத்திர சொந்தங்களும் அறிந்துக் கொள்ளவும், புதுக்கோட்டை பங்காளிகளின் எதிர்கால சந்ததியினர் பூஜை வழிபாடு முறைகளை மறந்து விடாமல் இருக்கவும் ஒரு பொக்கிஷமாக இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

சமுதாய வளர்ச்சி மற்றும் ஆன்மீக சேவையாக இந்த ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை சிறப்பிதழை வெளியிட முயற்சிகள் எடுத்த TNRBA மாநில பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங் அவர்களுக்கும், சிறப்பிதழ் வெளியீட்டுக்கு தேவையான தகவல்கள், ஆதரவு, ஒத்துழைப்பு அளித்த ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை அனைத்து நிர்வாகிகளுக்கும்,

இந்த இதழ் உருவாக்கத்தில் பங்களிப்புகள் அளித்த, ஸ்ரீதேவுத்தி மாத்தா அறக்கட்டளை தலைவர் திரு.S.சசி கபூர் சிங் அவர்களுக்கும், கொளத்தூர் திருமதி.J.ஜான்சி ராணி பாலாஜி சிங் அவர்களுக்கும், TNRBA மாநில மகளிரணி துணை அமைப்பாளர் புதுக்கோட்டை திருமதி.A.காஞ்சனா அருண் பிரசாத் அவர்களுக்கும், TNRBA புதுக்கோட்டை மாவட்ட தலைவர் திரு.V.ரவிச்சந்திரன் சிங் அவர்களுக்கும், TNRBA திருநெல்வேலி – தென்காசி மாவட்ட தலைவர் திரு.N.பிரேமானந்தா சிங் அவர்களுக்கும், TNRBA வட சென்னை மாவட்ட செயலாளர் திரு.B.K.பாலாஜி சிங் அவர்களுக்கும் என் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அன்பு சகோதரன்,

Dr.G.பவானி சிங்
TNRBA மாநில தலைவர்
நாள்: 24.06.2023



## தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு வணக்கம்.

ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை சார்பாக, 2023 ஆம் ஆண்டு, மே மாதம் 18,19,20 ஆகிய தினங்களில் புதுக்கோட்டை மாவட்டம், ஆலவயல் கிராமத்தில் நடைபெற்ற ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜையை பற்றி அனைத்து இராஜபுத்திர சொந்தங்களும் அறிந்து கொள்ளும் வகையில்,

தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் மின் இதழ் ஆறாவது பதிப்பை, 25.06.2023 அன்று (ஞாயிற்றுக்கிழமை) "ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை" சிறப்பிதழாக வெளியிடுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த சிறப்பிதழை வெளியிட ஆதரவும், ஊக்கமும் அளித்த தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்க மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களுக்கும், ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா அறக்கட்டளை கோவில் நிர்வாகிகள் அனைவருக்கும் எங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அது போல ஸ்ரீதேவுத்தி மாத்தாவின் வரலாற்றை அறக்கட்டளை சார்பாக பகிர்ந்த, கொளத்தூர், வட சென்னை பகுதியை சேர்ந்த திருமதி.J.ஜான்சி ராணி பாலாஜி சிங் அவர்களுக்கும், ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாட்டு முறைகளை அறக்கட்டளை சார்பாக தொகுத்து வழங்கிய, மாநில மகளிரணி துணை அமைப்பாளர் திருமதி.A.காஞ்சனா அருண் பிரசாத் அவர்களுக்கும் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை தகவல்களை சரிபார்க்கவும், விழா புகைப்படங்களை அளித்தும், ஆதரவுகளை கொடுத்த, ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை தலைவர் திரு.S.சசி கபூர் சிங் அவர்களுக்கும், இந்த சிறப்பிதழ் சரிபார்ப்புக்கு உதவிய திருநெல்வேலி - தென்காசி மாவட்ட தலைவர் திரு.N.பிரேமானந்தா சிங் வட சென்னை மாவட்ட செயலாளர் திரு.B.K.பாலாஜி சிங் அவர்களுக்கும், எங்கள் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தலையங்கம்

புதுக்கோட்டை கிளையின் 40ஆம் ஆண்டு விழாவை ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை விழாவில் ஒரு அங்கமாக சிறப்புடன் நடத்திய புதுக்கோட்டை மாவட்ட தலைவர் திரு.V.ரவிசந்தர் சிங் அவர்களுக்கும் நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆலவயலில் கட்டவிருக்கும் இராஜபுத்திர சமுதாய கூடத்திற்கு உலகமெங்கிலும் உள்ள இராஜபுத்திரர்கள் தங்களால் இயன்ற நன்கொடைகளை ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளைக்கு அனுப்பி, இந்த உன்னத ஆன்மீக பணியில் பங்கு கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஜெய் ஸ்ரீதேவுத்தி மாத்தா !



J. பிரகாஷ் சிங்
இயக்குநர் - மின் இதழ் நிர்வாக குழு
TNRBA மாநில பொது செயலாளர்



திரு.S.சசிகபூர் சிங்
ஸ்ரீதேவுத்தி மாத்தா அறக்கட்டளை தலைவர்



திரு.V.ரவிச்சந்தர் சிங்
புதுக்கோட்டை மாவட்ட தலைவர்



திரு.N.பிரேமானந்தா சிங்
திருநெல்வேலி, தென்காசி மாவட்ட தலைவர்



திரு.B.K.பாலாஜி சிங்
வட சென்னை மாவட்ட செயலாளர்

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா வரலாறு

வரலாற்று காலம் தொட்டே இராஜபுத்திர வீரர்கள் எதிரிகளை தடுத்து எதிர் கொள்வதில் வலிமையும் வல்லமையும் பெற்றவர்கள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

இராஜபுத்திரர்கள் என்றாலே வீரம். வீரம் என்றாலே இராஜபுத்திரர்கள் என்பது சிறப்புக்குரிய அம்சமாகும்.

புதுக்கோட்டை தொண்டமான் அரசர்கள் - ஆலவாயல் சுற்றுவட்டாரப் பகுதிகளை நிர்வகித்து பாதுகாக்கும் பொறுப்பை இராஜபுத்திர வம்சாவளியிடம் ஒப்படைத்திருந்தனர் இதனால் நம் இனத்தவர்களை அந்தப் பகுதி மக்கள் "ராஜா வீட்டு பிள்ளைகள்" என இன்று வரையும் அழைக்கின்றனர்.

ஆலவயல் பகுதியை இரவு நேரம் காவல் புரிந்த இராஜபுத்திர வீரர் அந்த சமயத்தில் கொள்ளையடிக்க வந்த கொள்ளையரிடம் ஏற்பட்ட மோதலில் ஊர் மக்களை பாதுகாத்து படுகாயமுற்று வீரகதி அடைந்தனர் என்பது வரலாறு.

ஆகவே அவர்கள் நினைவாக ஊர் மக்கள் வேட்டைக்கார சாமியை ஊர் எல்லையில் நிறுவி வழிபட்டு வருகின்றனர். ஊரில் எந்த கோவிலிலும் விசேஷங்கள் நடந்தாலும் முதலில் வேட்டையார் கோவிலில் வழிபட்ட பின்பு தான் தத்தம் கோவிலில் பூஜை செய்வார்கள் என்பது ஐதீகமாக உள்ளது.

வேட்டையார் கோவிலில் இன்றும் முதல் மரியாதை "ராஜா வீட்டு பிள்ளைகளுக்கு" வழங்கி வருவது நமக்கு கிடைத்த தனி சிறப்பாகும்.

தமிழகத்தில் நடந்த யுத்தத்தின் போது தேவுத்தி என்ற பெண்ணின் கணவர் கலந்து கொண்டு வீர மரணம் அடைந்துள்ளார். அவரது மரணச் செய்தியைக் கேட்ட பின் தேவுத்தி என்ற பெண் உடன்கட்டை ஏறினாள், அதாவது தீ மூட்டி தன்னை மாய்த்துக் கொண்ட வீர தியாகப் பெண்மணி.

தமிழகத்தில் உடன்கட்டை ஏறிய கடைசி இராஜபுத்திர பெண்மணி என்ற சிறப்பையும் பெற்றவர்.

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா வரலாறு

உடன்கட்டை ஏறி உயிர் தியாகம் செய்த தேவுத்தி தேவியின் உடல் சாம்பலாகி விட்ட பிறகு, அங்கு கண்ட அதிசயம் அவர் அணிந்திருந்த ஆபரணங்கள் குறிப்பாக கருகமணி மாலை, தாலி சரடு, மற்றும் அணிகலன்கள் எந்த வித பாதிப்பும் அடையாமல் அப்படியே ஜொலித்தப்படியே இருந்துள்ளன.

இந்த அற்புதத்தை கண்டு வியந்து அவற்றை தெய்வ சக்தியாக வழிபட்டு வந்தனர்.

காலபோக்கில் வேலைவாய்ப்பு காரணமாக பல குடும்பங்கள் ஆலவயலை விட்டு வெளியேறினர். அதனால் வழிபாடு தடை பட்டது.

பல ஆண்டுகளுக்கு பிறகு ஆலவயலில் வசித்து வந்த இராஜபுத்திர வம்சாவழியினர் வீட்டில் வளர்த்து வந்த பசுக்களின் பால்கள் கசப்பு தன்மை கொண்டதாக இருந்தது. இதனால் அச்சம் கொண்டவர்கள் அக்கால முறைப்படி ஊர் பூசாரியிடம் முறையிட அவர்கள் சாமியாடி அருள் வாக்கு கூறியபடி ஸ்ரீதேவுத்தி மாத்தாவை வணங்காமல் விட்டதால் ஏற்பட்ட பாதிப்பு என கூறினார்.

மேலும் அதற்கான பூஜை செய்யும் உரிமையுள்ள குடும்பத்தார் கோயம்புத்தூரில் வசிப்பதாகவும் அவர்களை கொண்டு தான் பூஜை செய்ய வேண்டும் என தெரிவித்தார்கள்.

ஆகவே அப்போது வசித்து வந்த இராஜபுத்திர வம்சாவழியின் மூத்தவர்கள் கோயம்புத்தூர் சென்று தேடி அலைந்து ஆலவயலை பிறப்பிடமாக கொண்ட இராஜபுத்திர வம்சாவழியினரை விசாரித்து பூசாரி குடும்பத்தை கண்டு பிடித்து ஆலவயல் அழைத்து வந்து ஸ்ரீதேவுத்தி மாத்தா வழிபாட்டினை தொடங்கினர்.

அன்று முதல் பூஜைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஸ்ரீதேவுத்தி மாத்தா ஆபரணங்களும், வீர மரணமடைந்த இராஜபுத்திர வீரர்களின் ஆயுதங்களும் இன்றும் ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா அறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த ஆலவயலில் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் மூன்றாவது வெள்ளிக்கிழமை அதாவது

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா வரலாறு

வைகாசி மாதம் முதல் வெள்ளிக்கிழமை ஸ்ரீதேவுத்தி மாத்தாவை கடவுளாக நினைத்து ஆலவயல் பங்காளிகள் ஒன்றிணைந்து வருடந்தோறும் சிறிய பூஜையாகவும், 5 வருடத்திற்கு ஒரு முறை இராஜபுத்திர வம்சாவளி உறவுமுறைகள் அனைவரையும் ஒன்றிணைத்து மிக விமர்சையாக பெரிய அளவில் பெரிய பூஜையாக வழிபாடு நடத்துவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இப்படியாக 80 ஆண்டுகளாக ஸ்ரீதேவுத்தி மாத்தாவிற்கு பூஜை செய்து வருகின்றனர்.

பூஜை செய்வதற்கென பூசாரி குடும்பத்தினர் பெங்களூரில் வசித்து வருகின்றனர். இப்பூஜையில் ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஒன்றுகூடி ஸ்ரீதேவுத்தி மாத்தாவின் அருளை, ஆசியை பெறுவர். மூன்று நாட்களும் ஆலவயல் விழாக்கோலம் கொண்டிருக்கும்.

ஸ்ரீ தேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை நிறுவி பங்காளிகள் மூலம் தொகையை வசூல் செய்து 4 ஆயிரம் சதுர அடியில் மனையை வாங்கி அந்த மனையில் சுற்றுச்சுவர் எழுப்பி, கழிவறைகள், குளியலறைகள் கட்டியுள்ளனர். வருங்காலத்தில் சுமார் 70 லட்சம் செலவில் "இராஜபுத்திர சமுதாயக்கூடம்' கட்டுவதற்கான ஏற்பாடுகளும் செய்துள்ளனர்.

இம்முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பவர்கள் அவ்விடத்தில் வாழ்கின்ற, வாழ்ந்த தலைமுறை பங்காளிகளே என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ தேவுத்தி மாத்தா கீ ஜே !



அறக்கட்டளை சார்பாக தொகுத்து வழங்கியவர்:-

திருமதி.J.ஜான்சி ராணி பாலாஜி சிங், கொளத்தூர், வட சென்னை

உ

# ஆலவயல் ஸ்ரீ தேவுத்தி மாதா கோவில் அறக்கட்டளை

பதிவு எண்: BK IV-25/2019

எண் : 146A ஆலவயல், கொப்பனாப்பட்டி வழி, பொன்னமராவதி தாலுகா,

புதுக்கோட்டை மாவட்டம்- 622 401.

| தலைவர் | துணைத்தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| ச.சசிகபூர் சிங் | ர.தேவிசிங் | தே.விஷால் | தே.விஜய்கமல்சிங் |
| ஆவடி | ஆலவயல் | பெங்களூர் | குரோம்பேட்டை |
| 94444 56122. | 97913 50622 | 99860 06533 | 98408 16595 |

துணைச்செயலாளர்

**பிரவீன்சராஜ் சிங்**
பொளிச்சலூர்
79046 23776

செயற்குழு உறுப்பினர்கள்

**ஹீ.அரவிந்**
பெங்களூர்
98860 69965

**பா.தீபக்**
ஆலவயல்
63836 74020

பொதுக்குழு உறுப்பினர்கள்

**ப.சுரேஷ் சிங்**
ஆலவயல்
88389 15928

**ந.மிதுன் சிங்**
கல்பாக்கம்
84895 86950

**பா.ரகுநாத் சிங்**
சோலிங்கநல்லூர்
73586 37111

**உ.தீரஜ் சிங்**
அம்பத்தூர்
79048 36300



# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாட்டு முறைகள்

## ஸ்ரீ தேவுத்தி மாத்தா கீ ஜே !

ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா (அம்மன்) பூஜை மூன்று நாட்கள் திருவிழாவாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சீரும், சிறப்புமாக நடைபெறும்.

பங்காளிகள், சொந்தம், பந்தம், உற்றார், உறவினர்கள் அனைவரும் அந்த பூஜை நாட்களுக்காக ஆவலுடன் எதிர்பார்த்து திருவிழாவில் கலந்துக் கொள்வார்கள்.

## முதல் நாள் பூஜை வைகாசி மாதம் முதல் வியாழக்கிழமை நடைபெறும்.

பங்காளிகள் அனைவரும் நீராடி, பூநூல் மாற்றி, கையில் காப்பு (கங்கணம்) கட்ட வேண்டும். ஸ்ரீதேவுத்தி மாத்தா அறையை சுத்தம் செய்ய வேண்டும். பூசாரியை வரவழைத்து ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவிலில் புண்ணியாதானம் செய்ய வேண்டும். ஸ்ரீதேவுத்தி மாத்தா கருவரையை சுற்றி நாலா புறமும் எலுமிச்சை பழம் நறுக்கி வைக்க வேண்டும். (புண்ணியாதானம் செய்த கலசத்தின் நூலை பிரிக்க கூடாது ) ஊர் எல்லை தெய்வம் வேட்டைகாரர் சாமி பூஜை மாலை 4 மணிக்கு துவங்கும்.

(காலையில் வேட்டைக்காரர் கோவில் பூசாரிக்கு தகவல் தெரியபடுத்தப்படும்)

பங்காளிகள், சொந்தம், பந்தங்கள் அனைவரும் வானவேடிக்கை, மேள தாளங்களுடன் முதலில் ஊர் பிள்ளையார் கோவிலுக்கு சென்று அர்ச்சனைகள் செய்து பிள்ளையாரை வணங்குவார்கள்.

## விநாயகர் பூஜைக்கான பொருட்கள்:

பூ மாலை - 1
தேங்காய் - 2
வாழைப்பழம் - 1 சீப்பு
கற்பூரம் - 1 பாக்கெட்
சந்தனம் - 1 சிறிய பாக்கெட்
ஊதுவத்தி - 1 பாக்கெட்
குங்குமம் - 1 சிறிய பாக்கெட்
வெற்றிலை, பாக்கு - 10 (ருபாய்)

பின்னர் ஊர் எல்லை தெய்வம் வேட்டைகாரர் சாமியை வழிபட1.5 கி.மீ தூரம் நடை பயணமாக பூஜைக்கு வேண்டிய பொருட்களுடன் வான வேடிக்கை, மேள தாளங்களுடன் ஊர்வலமாக செல்வார்கள்.



# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாட்டு முறைகள்



வேட்டைக்கார சாமிக்கும், இதர சாமிகளுக்கும், குதிரைகளுக்கும் வேஷ்டி, துண்டுகள் அணிவித்து, மலை போன்று தேங்காய்கள் உடைத்து, தார் தாராக வாழைப்பழங்களை படைத்து, ஊருக்கே தெரியும் அளவுக்கு சாம்பிராணி புகை தூபம் போடுவார்கள்.



கோவில் பூசாரி சாம்பிராணி காண்பித்து, தேங்காய் உடைத்து தீபாராதனை காட்டுவார். அனைவருக்கும் தேங்காய் மூடி, வாழைப்பழம் பிரசாதமாக வழங்குவார்கள்.வேட்டைக்காரர் சாமி பூஜையின் போது, வேண்டுதல்களின் படி, .

காளை மாடு கன்றுகுட்டியையும் கோவிலுக்கு தானமாக வழங்குவார்கள்

## வேட்டைக்கார சாமி பூஜைக்கு வேண்டிய பொருட்கள் :

நிறை மாலை -1, குதிரை மாலை -2
பைரவர் மாலை -1, சாமி மாலை -2
காடா துணி -10 மீட்டர், வேஷ்டி+துண்டு-4
பைரவர் துண்டு -1, கதம்பம் பூ- 30 முழம்
வாழை தார் - 4, தேங்காய் - 25
கற்பூரம் -1 பாக்கெட், சாம்பிராணி -5 கட்டி
வெற்றிலை -1 கவுளி,
கொட்டை பாக்கு - 10 ரூபாய்
ஊதுவத்தி - 5 பாக்கெட்





# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாட்டு முறைகள்

## இரண்டாம் ஆம் நாள் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வைகாசி மாதம் முதல் வெள்ளிக்கிழமை துவங்கும்.

பங்காளிகள் (ஆண்கள்) அனைவரும் காலையில் நீராடி, சிவப்பு வேஷ்டி அணிந்து, கையில் கங்கணம் கட்டி கொண்டு, பூனூல் மாற்றி, உண்ணாவிரதத்துடன் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜைக்கான வேலைகளை துவங்குவார்கள். பங்காளிகள் அனைவரும் ஸ்ரீதேவுத்தி மாத்தாவின் அணிகலன்கள் உள்ள பிட்டாராவை (பெட்டி), பூசாரியின் மூலமாக எடுத்து அதை திறந்து அதிலுள்ள நகைகள், துணிமணிகள் ஆகியவற்றை தட்டு, கூடைகளில் வைத்து உறவினர்கள் அனைவரின் பார்வைக்கு வைப்பார்கள்.

## ஸ்ரீதேவுத்தி மாத்தாவின் பிட்டாராவில் உள்ள பொருட்கள் :

1) காது அணிகலன் - சிவப்பு கல் தோடு
2) பச்சை மணி பொதித்த மூக்கு வளையம்
3) உட் கழுத்து லட்சா - இரண்டு சிறிய குண்டு
4) மூன்று பெறிய குண்டுகள் உள்ள தாலி (மாங்கல்யம்)
5) கை வளையல்கள் பச்சை கண்ணாடி வளையல்கள்.
6) கால் விரல் மெட்டி
7) சிவப்பு நூல் புடவை, ஜாக்கெட் துணி, மற்றும் தேவுத்தி மாத்தாவின் சகோதர்கள் இருவருக்கு வைத்து வணங்கும் சிவப்பு சட்டை துணி, வேட்டி. துண்டு.
8) எலுமிச்சை பழம், தேங்காய், பூ

## உறவினர்கள் அனைவரின் பார்வைக்கு வைக்கப்படும் இதர பொருட்கள் :

துப்பாக்கி, வில், அம்பு, கத்தி, வீச்சு அறிவாள், பட்டா கத்திகள், கை தடுப்புகள், வாள், சுழல் கத்திகள்.

பின்னர் பங்காளி ஆண்கள் ஒவ்வொருவரும் மேற்குறிப்பிட்ட பொருட்களை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்வார்கள். பூஜாரிகள் வாயில் துணியை கட்டிக்கொண்டு, மூங்கில் கூடையில் தேவுத்தி மாத்தாவின் மாங்கல்ய பொருட்களை எடுத்துக் கொள்வார்கள். இவர்களுடன் பங்காளிகள், உறவினர்கள் ஒன்று கூடி ஊர்வலமாக ஊர் குளத்திற்கு மேள தாளத்துடன் செல்வார்கள். ஊர்வலத்தின் போது மனதில் பக்தியுடன், தேவுத்தி மாத்தா கீ ஜே என்ற கோசத்துடன் செல்வார்கள். குளத்திற்கு சென்றதும், அம்மனின் ஆயுதங்களை புனித நீரில் சுத்தம் செய்வார்கள். அது போல அம்மனின் மாங்கல்ய பொருட்களையும் புனித நீரில் சுத்தம் செய்வார்கள்.

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாட்டு முறைகள்

கற்பூரம் ஏற்றி வழிபட்ட பின்னர் பழைய படி பொருட்களை தட்டு, கூடைகளில் வைத்து, தேவுத்தி மாத்தா கீ ஜே என்கிற பக்தி கோசத்துடன் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவிலுக்கு திரும்புவார்கள். கோவிலுக்கு வந்த பின்னர் பங்காளிகள் (ஆண்கள்) மற்றும் வயதான பெண்கள் மட்டுமே பூஜைக்கான பிரசாதம் செய்வார்கள்.



### பூஜைக்கான பிரசாதங்கள்

பச்சரசியில் உப்பில்லா பூரி, வெல்லம் கலந்த அதிரசம், பரங்கி காய் அல்வா, முக்கனி வகைகள், பானகம், நீர் மோர், பஞ்சாமிர்தம்.



### பிரசாதம் செய்ய தேவையான பொருள்கள்:-

பச்சரிசி, பரங்கி காய் (அல்வா செய்ய), வெல்லம், ஏலக்காய், முந்திரி, நெய், சமயல் எண்ணெய், சர்க்கரை.

### பழ வகைகள்:-

மா, பலா, வாழை, சாத்துக்குடி, திராட்சை, ஆரஞ்சு, பேரிச்சம், அன்னாசி, ஆப்பிள்.

உரலில் பச்சரி போட்டு உலக்கையால் இடித்து, மாவு தயாரித்து அதில் வெல்லம் அல்லது பாகு கலந்து பூரி தயாரிப்பார்கள்.
இதற்கிடையில் பங்காளி சுமங்கலி பெண்கள் அம்மனின் கருகமணி தாலியை புதுபிக்க புதிய மஞ்சள் நூலில் புது கருகமணியையும், அம்மனின் லட்சாவையும் கோர்ப்பார்கள்.





# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாட்டு முறைகள்

மேலும் பங்காளி சுமங்கலி பெண்கள், பூஜைக்கான விளக்குகள், தட்டுகள், மணி, தூபக்கால், கோவில் பாத்திரங்கள் அனைத்தையும் சுத்தம் செய்து பூஜைக்கு தயாராக வைப்பார்கள்.

ஸ்ரீதேவுத்தி மாத்தாவுக்கு (அம்மன்) மல்லிகை பூ மிகவும் இஷ்டம். அதனால் மல்லிகை பூவை மூட்டை, மூட்டையாக வாங்கி, பெண்கள் அனைவரும் பூவை கோர்த்து ஸ்ரீதேவுத்தி மாத்தாவின் கருவறையில் கரும்பு நட்டு (பூஜை மேடையில் பைப் உள்ளது) மல்லிகை பூ பந்தல் அமைத்து, கருவறை முழுவதும் மல்லிகை தோரணங்களால் அலங்காரம் செய்வார்கள்.

(மல்லிகை பூவிற்கு மட்டுமே அனுமதி) கலசத்தில் தேங்காய் வைத்து, அதில் மஞ்சள் முகம் அமைப்பார்கள். அம்மனுக்கு மஞ்சள் காப்புடன்



செந்தூரத்தில் திலகமிட்டு, மூக்குத்தி, புல்லாக்கு, வளையல், லட்சா, பெரிய தாலி, காது கம்மல், கால் விரல் மெட்டி, சிவப்பு நூல் புடவை, ஜாக்கெட் ஆகியவைகளால் அம்மனை அலங்கரிப்பார்கள்.

பங்காளிகள் தயாரித்த பிரசாரம் தயாரானதும், அம்மனின் கருவறைக்குள், பூ பந்தலுக்குள், கலசத்தில் அலங்கரிக்கப்பட்ட அம்மனை வைப்பார்கள்.

படையலுக்கு உள்ளே மூன்று வாழை இலை (தேவுத்தி மாத்தா, படா ஆஜா, சோட்டா ஆஜா)

வெளியே மூன்று வாழை இலை போட வேண்டும். அதில் உப்பில்லா பச்சரிசி பூரி, வெல்லம் கலந்த அதிரசம், பரங்கி காய் அல்வா, மா, பலா, வாழை, முக்கனிகளுடன் ஆப்பிள், திராட்சை பழங்கள், அனைத்து பழங்களால் தயாரிக்கப்பட்ட பஞ்சாமிர்தம், இவற்றுடன் சீப்பு சீப்பாக வாழை பழங்கள், கௌலி கௌலியாக வெற்றிலை, பாக்குகள், செந்தூரம், மஞ்சள், குங்குமம் அனைத்தையும் படைப்பார்கள். உள்ளே இரண்டு கலயத்தில் சுக்கு வெல்லம் கலந்த பானகம், நீர் மோர், இரண்டு இளநீர்,

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாட்டு முறைகள்

அது போல வெளியே இரண்டு கலயத்தில் சுக்கு வெல்லம் கலந்த பானகம், நீர்மோர், இரண்டு இளநீர் வைக்க வேண்டும். இரண்டு வேட்டி. துண்டு. சிவப்பு நூல் புடவை, ஜாக்கெட் துணி வைக்க வேண்டும். பச்சை கண்ணாடி வளையல்கள், காதோலை கருகமணி. மஞ்சள் கிழங்கு, குங்குமம், செந்தூரம் வைக்க வேண்டும்.

மேலே சொன்ன பொருட்கள் அனைத்தும் வைத்த பிறகு, பூசாரிகள் அனைவரும் வாயில் துணியை கட்டிக்கொண்டு, சாம்பிராணி புகை போட்டு பின்னர் கற்பூரம் காட்டி தேவுத்தி மாத்தாவை அழைப்பார்கள்.

அழைப்பை ஏற்று முதலில்
கோடவாலா வருவார்...
பின்னர் படா ஆஜா,
சோட்டா ஆஜா, வருவார்கள்.

கூப்பிடுங்கள் அவள் வருவாள்..
வழி விடுங்கள் தேவுத்தி மாத்தா
வருகிறாள்...என்று சொல்வார்கள்.

அனைவரும் பயபக்தியுடன், கண்களில் கண்ணீர் மல்க, பல நாள் கனவுகள் பலிக்க, ஏக்கத்துடன்
தேவுத்தி மாத்தா கீ ஜே என
அழைப்பார்கள்.

அம்மா தேவுத்தி மாத்தா வருவார்கள்...

சந்தோஷ்.. பஹுத்.. சந்தோஷ்...
தும்ஹாரா வம்ஷ் அச்சா ரஹேகா...

(மகிழ்ச்சி... மிகுந்த மகிழ்ச்சி...
உங்கள் குலம் நன்றாக இருக்கும்...)

என ஆசிர்வதித்து, உள்ளம் மகிழ்ந்து சிரித்து மறைவாள்.

இந்த ஒரு தெய்வீக வாக்குக்காக, பங்காளிகள் ஐந்து வருடம் தவம் இருந்து காத்திருப்பார்கள்.

“தாயின் (அம்மனின்) அழகு முகத்தை காண கோடி கண் வேண்டும்" என்று எண்ணி அனைவரும் உள்ளம் உருகி உணர்ச்சி வசப்பட்ட கண்ணீருடன் தலை குனிந்து வணங்கி நிற்பார்கள்

ஊர் தலைவர்கள், பெரியவர்கள், பொது மக்கள் அனைவரும் தலையில் பூ, பழ தட்டுடன் வந்து மாத்தாவுக்கு (அம்மனுக்கு) மரியாதை செலுத்தி வணங்குவார்கள்.

அம்மா ! தாயே !
மாதம் மும்மாரி மழை தா ஆத்தா !

என வேண்டுதல் வைப்பார்கள்.

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாட்டு முறைகள்

அம்மனின் தரிசனத்துக்கு பின்பு, வேண்டுதல், காணிக்கையாக, பொன், பொருள், பணம் என அவர்களின் வேண்டுதலுக்கு ஏற்ப காணிக்கைகள் செலுத்துவார்கள்.

இதில் ஒரு மிக பெரிய விசேஷம் என்னவென்றால்,

பூஜை முடிந்து இரவுக்குள்..
பெரிய மழையோ,
சின்ன மழையோ அல்லது
மழை சாராலோ பெய்து
ஊருக்கு அம்மன் அருள் கிடைத்தது விட்டது என்று ஊர்காரர்கள் மகிழ்ச்சி பொங்க கூறுவார்கள்.

பூஜை முடிந்ததும் பிரசாதமாக, தயிர், அண்டா, அண்டாவாக அனைத்து பழங்களையும் போட்டு பஞ்சாமிர்தம், வெல்லம் கலந்த பானகம் ஆகியவற்றை உற்றார், உறவினர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் வழங்குவார்கள்.

இரவு அறுசுவை உணவு உண்ட பின்னர் இரண்டாம் ஆம் நாள் பூஜைக்கு பிறகு ஊருக்கு பயணம் செல்பவர்களுக்கு பிரசாதமாக துணி பையில் அதிரசம், செந்தூரம், விபூதி, குங்குமம் கொடுத்து அனுப்புவார்கள்.

மூன்றாம் ஆம் நாள் வைகாசி மாதம் முதல் சனிக்கிழமை பாலாஜி பூஜை செய்வார்கள்.

தேவுத்தி மாத்தா கலசத்தில் உள்ள அம்மன் உருவத்தை குளத்தில் கரைத்து விட்டு சுத்தம் செய்யப்பட்ட ஸ்ரீதேவுத்தி மாத்தா ஆபரணங்களை மறுபடியும் பெட்டியில் வைத்து விடுவர்.

மீண்டும் ஐந்து வருடங்கள் கழித்து தான் ஸ்ரீதேவுத்தி மாத்தா ஆபரணங்களை படையலுக்கு எடுப்பார்கள்.

பின்னர் வெற்றிலை, பாக்கு, பழங்கள் வைத்து பாலாஜி பூஜை செய்வார்கள். கருவரை பூ பந்தலில் உள்ள பூக்களை சுமங்கலி பெண்களுக்கு பங்காளிகள் வழங்கி விடுவார்கள்.

படையல் பொருட்கள் பங்காளிகளுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும்

குறிப்பு :-

தேவுத்தி மாத்தா பொருட்களை சுத்தம் செய்யும் குளம் குடிநீர் குளம் ஆகும். அதில் இறங்கி தேவுத்தி மாத்தா பொருட்களை சுத்தம் செய்ய மட்டுமே அனுமதிப்பர். மற்ற பிரிவினர் யாரும் குளத்தில் இறங்க அனுமதியில்லை.

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை வழிபாட்டு முறைகள்

மூன்று நாள் பூஜைகள் அனைத்தும் முடிந்த பின்னர் ஊர் திரும்பும் உறவினர்களுக்கு பிரசாதமாக துணி பையில் அதிரசம். செந்தூரம், விபூதி, குங்குமம் கொடுத்து அனுப்புவர்.

சொந்தங்கள் ஆலவயல் வந்து மூன்று நாட்கள் பங்காளிகளின் இடங்களிலும், மண்டபத்திலும் தங்கியிருந்து பூஜைகளில் கலந்து கொள்ள தேவையான .ஏற்பாடுகள் செய்ய அறக்கட்டளை நிர்வாகிகள் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை தங்களது கடினமான உழைப்பை வழங்குவார்கள்.

மார்ச் மாதமே, சமையல்காரர், பந்தல் போடுபவர், காய்கறி - பால் சப்ளையர், மின் விளக்குகள், ஜெனரேட்டர், விநாயகர் கோவில் மற்றும் வேட்டைக்காரர் கோவில் சென்று வர மேளம் & நாதஸ்வரம், பெயிண்டர், பாத்திரங்கள், வேலைக்கான ஆட்கள் ஆகியவற்றை பேசி முன்பணம் கொடுத்து விடுவார்கள்.

ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை விழாவின் போது, பங்காளிகள் குழந்தைகளுக்கு காது குத்துதல், மொட்டை போடுதல் போன்ற வேண்டுதல்களை நிறைவேற்றி கொள்கிறார்கள்.

மேலும் வேண்டுதலின் படி திருமணங்கள் நடத்தி அம்மன் அருளை பெற்றுக் கொள்கிறார்கள்.

திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளின் முதல் பத்திரிகையை ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவிலில் வைத்து பூஜித்த பின்னரே உற்றார் உறவினர்களுக்கு விநியோகம் செய்ய துவங்குவார்கள்.

அது போல திருமணம் முடிந்ததும் மணமக்கள் ஸ்ரீதேவுத்தி மாத்தாவை தரிசித்து ஆசி பெற்ற பின்னரே, இதர கோவில்களுக்கு செல்வார்கள்.

ஸ்ரீ தேவுத்தி மாத்தா கீ ஜே !



அறக்கட்டளை சார்பாக தொகுத்து வழங்கியவர்:-

A.காஞ்சனா அருண் பிரசாத்,
மாநில துணை அமைப்பாளர்
புதுக்கோட்டை

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கவிதை...



கை கூப்பி, சிரம் தாழ்த்தி,
வணங்குகிறோம்
உருவம்
இல்லாதவளுக்கு !

மல்லிகையினால் பந்தலிட்டு,
மஞ்சளில் உருவெடுத்து,

செந்தூரத்தினால் திலகமிட்டு,

செந்நிற நூல் புடவையில்
அவளை அலங்கரித்து,

மல்லிகை பூ கோர்த்து
கார் கூந்தலுக்கு அழகு சேர்த்து,

கண்களுக்கு மையிட்டு
செவி சாய்க்கும் காதுகளுக்கு
காதணி பூட்டி,

சங்கு கழுத்துக்கு
மாங்கல்யம் அணிவித்து

பச்சை வண்ண கை வளையல்
அணிவித்து

தாய் முகம் அழகுக்கு அழகு
சேர்க்கும் மூக்கு
புல்லாக்கு மின்ன,

இவள் அழகை காண
கொட்டி கிடந்த மலர்கள்
கோர்த்தெடுத்த
மலர் மாலைகள் போல,
சொந்தங்கள் ஒன்றிணைந்தோம்.

உருவம் இல்லாதவளை
செந்தூரத்தால் உருவெடுத்து

சாம்பிராணி புகை மூட்டி
காண கண் கோடி போதாதென
ஏங்கி பார்க்கிறோம்.

எங்கள் குல தெய்வம்
ஸ்ரீதேவுத்தி மாத்தாவை !

A.காஞ்சனா அருண் பிரசாத்,
மாநில துணை அமைப்பாளர்
புதுக்கோட்டை

உ

ஜெய் தேவுத்தி மாதா ஜெய் தேவுத்தி மாதா

# ஆலவயல் ஸ்ரீ தேவுத்தி மாதா கோவில் அறக்கட்டளை

## கட்டிட நிதி வழங்கிடுவீர்

**உறவுகளே! அனைவருக்கும் வணக்கம்!**

உறவுகளே, ஆலவயலில் நூற்றாண்டுகளாக இராஜபுத்திர வம்சா வழியினர் வசித்து வருகின்றனர். அவர்களின் பெரும்பான்மையானவர்கள் பணிநிமித்தமாக பல ஊர்களில் வாழ்கின்றனர். அவர்களின் குலதெய்வமான ஸ்ரீ தேவுத்தி மாதா கோவிலுக்கு வருடாவருடம் வைகாசி முதல் வெள்ளிக்கிழமை வருகை தந்து ஸ்ரீ தேவுத்தி அம்மனை வழிபடுவர். மேலும் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை அனைத்து உறவுமுறையினர்களையும் அழைத்து மிக சிறந்த முறையில் பெருவிழாவாக ஏற்பாடு செய்து ஸ்ரீ தேவுத்தி மாதா கோவிலில் வழிபடுவர். மேலும் கோவில் நிர்வாகவசதிக்காக ஆலவயல் ஸ்ரீ தேவுத்தி மாதா கோவில் அறக்கட்டளை 2019-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அந்த அறக்கட்டளையின் மூலம் இராஜபுத்திர சமுதாய கூடம் கட்ட ஆலவயல் பங்காளிகள் முடிவு செய்து அதற்கான இடத்தையும் வாங்கியுள்ளோம். அந்த இடத்தில் இராஜபுத்திர சமுதாய கூடம் கட்ட பெரும் தொகை தேவைபடுவதால் அனைத்து உறவுகளும் நல்உள்ளம் கொண்டு கட்டுமான நிதி வழங்க வேண்டுகிறோம். அறக்கட்டளை வங்கி கணக்கில் நன்கொடையை செலுத்துமாறு அறக்கட்டளை சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் தொடர்புக்கு

| தலைவர் | செயலாளர் | பொருளாளர்: |
| --- | --- | --- |
| **ச. சசிகபூர் சிங்** | **தே. விஷால்** | **தே.விஜய்கமல் சிங்** |
| **94444 56122** | **99860 06533** | **98408 16595** |


**ALAVAYAL SRI DEVUTHI MATHA KOVIL ARAKKTTALAI**
**A/C NO : 1793155000018709**
**IFSC : KVBL 0001793**

alavayal sri devithi matha kovil tresat 94444561:12 p65 5/18/2023, 5:18 PM

# TAMILNADU RAJPUT BONDIL ASSOCIATION

Reg. No: 10/2019. Address:2, Ponnusamy Nagar, Near Thirumalai Nagar Extension,
Kolathur Post, Chennai – 600099.

அனைத்து இராஜபுத்திர பொந்தில் சமுதாய மக்களுக்கும் என் அன்பு வணக்கங்கள்.

புதுக்கோட்டையை பூர்விகமாக கொண்ட இராஜபுத்திர வம்சாவழியினர்கள், வரலாற்று சிறப்புமிக்க ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜையினை கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாக கொண்டாடி வருகிறார்கள். ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜையினை மூன்று நாள் திருவிழாவாக ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அனைத்து சொந்தங்களையும் அழைத்து விமரிசையாக கொண்டாடி வருகிறார்கள்.

2019 ஆண்டு ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளையை நிறுவி, (பதிவு எண்: **BK IV -25/2019)** புதுக்கோட்டை இராஜபுத்திர சமுதாய மக்களின் வளர்ச்சி மற்றும் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜையினை வெகு விமர்சையாக கொண்டாடும் பணியில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

மேலும், பங்காளிகளிடம் நன்கொடைகள் பெற்று அறக்கட்டளை பெயரில் ஆலவயலில் நான்காயிரம் சதுர அடி மனை வாங்கி அந்த இடத்தில் காம்பவுண்ட் சுவர் எழுப்பி, குளியலறைகள், கழிவறைகள் கட்டியுள்ளார்கள். அடுத்து அந்த இடத்தில் சுமார் 70 லட்சம் ருபாய் செலவில் இராஜபுத்திர சமுதாய கூடம் கட்டும் முயற்சியில் ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை நிர்வாகிகள் முழு மூச்சில் இறங்கியுள்ளார்கள். இந்த பெரும் நிதியை திரட்ட, இராஜபுத்திர சொந்தங்கள் அனைவருடைய பேராதரவையும் அவர்கள் வேண்டி வருகிறார்கள்.

நம் இரத்த சொந்தங்கள் அனைவரும், தங்களால் இயன்ற நன்கொடைகளை ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளைக்கு வழங்கி இந்த உன்னத ஆன்மீக பணியில் பங்கு பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்பு சகோதரன்,

Dr.G.பவானி சிங்
TNRBA மாநில தலைவர்



# TNRBA புதுக்கோட்டை கிளை சங்கத்தின் 40 ஆம் ஆண்டு விழா

ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா அருளால், புதுக்கோட்டை கிளை சங்கத்தின் 40ஆம் ஆண்டு விழா, ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை விழாவின் போது, இராஜ்புத் பவன் சமுதாய அரங்கில் 19.05.2023 அன்று கூட்டம் மிக சிறப்பாக நடைபெற்றது.

காலை 11 மணியளவில், மகளிரணியினரின் தமிழ் தாய் வாழ்த்துடன் விழா துவங்கியது. முன்னதாக, புதுக்கோட்டை மாவட்ட தலைவர் திரு.V.ரவிசந்தர் சிங் அவர்கள் சிறப்பு விருந்தினர்களை விழா மேடைக்கு வரவேற்றார். புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் திரு.K.ராஜேந்தர் சிங் அவர்கள் விழாவுக்கு வந்த அனைவரையும் வரவேற்று பேசினார்.

புதுக்கோட்டை கிளை சங்கத்தின் சார்பாக, ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை நிர்வாகிகள், TNRBA சிறப்பு விருந்தினர்கள் அனைவரையும் பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தார்கள்.






ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை நிர்வாகி திரு.D.கமல் சிங் அவர்கள் அறக்கட்டளையின் செயல்பாடுகளை விளக்கி புதிதாக கட்டவிருக்கும் சமுதாய கட்டிடத்தை பற்றி விவரித்து அனைவரும் நன்கொடைகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட தலைவர் திரு.G.தேவேந்திர சிங், மாநில உதவி செயலாளர் திரு.E.ராஜேந்தர் சிங், திருநெல்வேலி - தென்காசி மாவட்ட தலைவர் திரு.N.பிரேமானந்தா சிங், திருநெல்வேலி - தென்காசி மாவட்ட செயலாளர் திரு.R.கங்காதர திலக் சிங், வட சென்னையை திருவள்ளூர் மாவட்ட செயலாளர் திரு.B.K.பாலாஜி சிங், வாடிப்பட்டி திரு.J.பிரேம் சிங் ஆகியோர்.. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வாழ்த்துரையும், ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளைக்கு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள்.

# TNRBA புதுக்கோட்டை கிளை சங்கத்தின் 40 ஆம் ஆண்டு விழா

TNRBA மாநில பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங், புதுக்கோட்டை கிளைக்கு வாழ்த்துக்களை தெரிவித்து சிறப்புரையை துவக்கினார். சங்கத்தின் செயல்பாடுகள், சமுதாய ஒற்றுமைக்கான அவசியம், எதிர்கால திட்டங்கள் பற்றி விளக்கினார்.

விருந்தினர்களை வரவேற்று இன்சுவை உணவுகள் பரிமாறி, ஒழுக்கத்துடனும், கட்டுபாடுடனும், ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜையினை மிக சிறப்பாக நடத்தி வரும் ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு வாழ்த்துக்களும், பாராட்டுதல்களும் வழங்கி உரையினை நிறைவு செய்தார்.



புதுக்கோட்டை நிர்வாகிகள் TNRBA சிறப்பு விருந்தினர்களையும், ஸ்ரீதேவுத்தி மாத்தா அறக்கட்டளை நிர்வாகிகளையும், சங்கத்தின் மூத்த உறுப்பினர்களையும், மகளிரணி நிர்வாகிகளையும், இளைஞரணி நிர்வாகிகளையும் கௌரவித்து



நினைவு பரிசுகள் வழங்கினார்கள். புதுக்கோட்டை மாவட்ட தலைவர் திரு.V.ரவிசந்தர் சிங், மாநில மகளிரணி துணை அமைப்பாளர் திருமதி.A.காஞ்சனா அருண் பிரசாத் மற்றும் இதர நிர்வாகிகள் விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் நன்றிகள் தெரிவித்தார்கள்.



# TNRBA புதுக்கோட்டை கிளை சங்கத்தின் 40 ஆம் ஆண்டு விழா




மதியம் 1 மணியளவில் தேசிய கீதத்துடன் விழா முடிவடைந்தது. மதிய உணவுக்கு பின்னர் கல்யாண கேந்திரா துவங்கியது. கல்யாண கேந்திராவில் பெறப்பட்ட திருமண வரன் பற்றிய விபரங்கள் திருமண தகவல் வாட்ஸப் குழுக்களிலும், அடுத்து வெளிவர இருக்கும் இராஜ்புத் திருமண தகவல் மின் இதழ் பதிப்பு –9லும் வெளியிடப்படும்.

TNRBA புதுக்கோட்டை கிளை சங்கத்தின் 40ஆம் ஆண்டு விழாவுக்கு சிறந்த முறையில் ஏற்பாடுகள் செய்து வெற்றிகரமாக நடத்தி முடித்த







புதுக்கோட்டை மாவட்ட தலைவர் திரு.V.ரவிசந்தர் சிங் அவர்களுக்கும், மாநில மகளிரணி துணை அமைப்பாளர் திருமதி.A.காஞ்சனா அருண் பிரசாத் மற்றும் இதர புதுக்கோட்டை நிர்வாகிகள் அனைவருக்கும் மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் சார்பாகவும், தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் தலைமை சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். நன்றி, வணக்கம்.

J.பிரகாஷ் சிங்
TNRBA மாநில பொது செயலாளர்



# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023 போட்டோ கேலரி




ஆலவயல் ஸ்ரீ தேவுத்தி மாத்தா கோவில் நுழைவாயில்



# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023 போட்டோ கேலரி



ஆலவயல் வேட்டைக்கார சாமி கோவில்





# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023 போட்டோ கேலரி



## முதல் நாள் ஆலவயல் வேட்டைக்கார சாமி கோவில் பூஜை





# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023 போட்டோ கேலரி



## இரண்டாம் ஆம் நாள் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை





# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023 போட்டோ கேலரி




புதிதாக கட்டப்பட உள்ள இராஜபுத்திர சமுதாய கூடத்தின் முகப்பு



இராஜபுத்திர சமுதாய கூடத்தின் தற்காலிக கொட்டகையில் சொந்தங்களுக்கு மூன்று நாட்களும் அறுசுவை உணவு பரிமாறுதல் சொந்தங்களுக்கு அறுசுவை உணவு பரிமாறுதல்

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023 போட்டோ கேலரி





## TNRBA புதுக்கோட்டை கிளை சங்கத்தின் 40 ஆம் ஆண்டு விழா





# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023
# போட்டோ கேலரி











# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை 2023 போட்டோ கேலரி





# TNRBA புதுக்கோட்டை கிளை சங்கத்தின் 40 ஆம் ஆண்டு விழா







# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை திருவிழா 2023
# போட்டோ கேலரி



சொந்தங்களின் குழு புகைப்படம்

# ஆலவயல் ஊராட்சி (Alavayal Gram Panchayat) பற்றிய தகவல்கள்

இராஜபுத்திர வம்சாவழியினருக்கு, ஸ்ரீதேவுத்தி மாத்தா அருள் பாவித்து வரும், ஆலவயல் ஊராட்சி (Alavayal Gram Panchayat), தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொன்னமராவதி தாலுகாவில் அமைந்துள்ளது.


இந்த ஊராட்சி, திருமயம் சட்டமன்றத் தொகுதிக்கும் சிவகங்கை மக்களவைத் தொகுதிக்கும் உட்பட்டதாகும். இந்த ஊராட்சி, மொத்தம் 7 ஊராட்சி மன்றத் தொகுதிகளைக் கொண்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகை 3301 ஆகும். இவர்களில் பெண்கள் 1607 பேரும் ஆண்கள் 1694 பேரும் உள்ளனர்.

ஆலவயல் ஊராட்சி, பொன்னமராவதியிலிருந்து 4 கி.மீ, புதுக்கோட்டையிலிருந்து 34 கி.மீ, திருச்சியிலிருந்து 61 கி.மீ, மதுரையிலிருந்து 71 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

ஆலவயலுக்கு மிக அருகாமையில் உள்ள இரயில் நிலையங்கள்:
திருமயம் (25.66 கி.மீ),
நமணசமுத்திரம் (26.28 கி.மீ),

ஆலவயலுக்கு அருகில் உள்ள முக்கிய இரயில் நிலையங்கள் :
திருச்சி (54.77 கி.மீ),
திண்டுக்கல் (61.35 கி.மீ),
மதுரை (64.76 கி.மீ),




ஆலவயல் -பொன்னமாரவதி ரோடு கூகுள் மேப் முகவரி:

https://maps.app.goo.gl/PogQaN7GRkyoAkWNA?g_st=iw

# ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை நிர்வாகிகள்



S. சசிகபூர் சிங்
தலைவர்



D.விஷால்
செயலாளர்



D.விஜய் கமல் சிங்
பொருளாளர்



R.தேவி சிங்
துணை தலைவர்



R.பிரவீன் ராஜ் சிங்
துணை செயலாளர்.



H.அரவிந்
செயற்குழு
உறுப்பினர்



B.தீபக் சிங்
செயற்குழு
உறுப்பினர்



B.ரகுநாத் சிங்
பொதுக்குழு
உறுப்பினர்



B.சுரேஷ் சிங்
பொதுக்குழு
உறுப்பினர்



N.மிதுன் சிங்
பொதுக்குழு
உறுப்பினர்



U.தீராஜ் சிங்
பொதுக்குழு
உறுப்பினர்

உ

# ஆலவயல் ஸ்ரீ தேவுத்தி மாதா கோவில் அறக்கட்டளை

பதிவு எண்: BK IV-25/2019

எண் : 146A ஆலவயல், கொப்பனாப்பட்டி வழி, பொன்னமராவதி தாலுகா,

புதுக்கோட்டை மாவட்டம்- 622 401.

## நன்றிகள்

ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தாவின் வரலாற்றையும், பூஜை வழிபாட்டு முறைகளையும் புதுக்கோட்டை இராஜபுத்திர வம்சாவழியினரிடம் பெற்று, அவற்றை சிறந்த முறையில் தொகுத்து, ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜை சிறப்பிதழாக வெளியிட்ட தமிழ்நாடு இராஜ்புத் பொந்தில் சங்கத்தின் மாநில தலைவர் Dr.G.பவானி சிங் அவர்களுக்கும், மாநில பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங் அவர்களுக்கும், பங்களித்த இதர நிர்வாகிகளுக்கும், ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை சார்பாக எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல தலைமுறைகளாக பங்காளிகள் முன்னெடுத்து நடந்தி வரும் இந்த ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா பூஜையினை மாநிலத்தின் பிற மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களில் வசிக்கும் இராஜபுத்திரர்கள் அனைவரும் அறிந்து கொள்ள இந்த சிறப்பிதழ் வழிவகுக்கும் என்பதில் எங்களுக்கு பெரிதும் மகிழ்ச்சி.

ஆலவயலில் கட்டவிருக்கும் இராஜபுத்திர சமுதாய கூடத்திற்கு, தங்களால் இயன்ற நன்கொடைகளை கீழ் கண்ட வங்கி கணக்கில் அனுப்பி வைத்து ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தாவின் அருளை பெறும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

வஙகி பெயர், கிளை: கரூர் வைசியா வங்கி, ஆலவயல்

வஙகி கணக்கு பெயர்: ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை

வஙகி கணக்கு எண்: 1793155000018709, **IFSC** குறியீடு: **KVBL 0001793**

ஸ்ரீதேவுத்தி மாத்தா கீ ஜே !

ஆலவயல் ஸ்ரீதேவுத்தி மாத்தா கோவில் அறக்கட்டளை நிர்வாகிகள்

நாள்: 24.06.2023